தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின்(தொழிற்கல்வி)–செயல்முறைகள் –
சென்னை.6
ந.க.எண்.1502/வி1/இ2/2010 நாள் 02.02.2011

| | |
|---|---|
| பொருள் | மேல்நிலைக்கல்வி – தமிழ்நாட்டிலுள்ள மேநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு வழங்குவது போன்று கணினி பயிற்றுநர்களுக்கும் ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்குவது குறித்த தெளிவுரைகள் வழங்குதல் – சார்பு. |
| பார்வை | 1. அரசாணை நிலை எண்.240 பள்ளிக் கல்வி (விஇ)துறை நாள் 18.08.2010.<br>2.தமிழ்நாடு கணினி ஆசிரியர்கள் சங்க கடிதம் நாள் 31.01.2011.<br>3.திருவண்ணாமலை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.120/A1/2011 நாள் 18.01.2011. |

----

பார்வை 2–ல் தமிழ்நாடு கணினி ஆசிரியர் சங்க 31.01.2011 நாளிட்ட கடிதத்தில் திருவண்ணாமலை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் நக.எண்.120/A12011 நாள் 18.01.2011–ல் திருவண்ணாமலை மாவட்டம், சித்தாத்துார் அரசு மேல்நிலைப்பள்ளியில் கணினி பயிற்றுநராகப் பணிபுரியும் திரு.அ.ஹரிக்குமார் என்பவருக்கு அளிக்கப்பட்ட உயர்கல்விக்கான ஊக்க ஊதிய உயர்வுகள் தவறு எனவும், அரசாணை நிலை எண் 240, பள்ளிக் கல்வித் (விஇ) துறை நாள் 18.08.2010ல் தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு உயர்கல்வித் தகுதிக்கான ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்கிட வழிகாட்டுதல்கள் அளிக்கப்பட்டுள்ளது எனவும், அவ்வரசாணையில் பள்ளி உதவி ஆசிரியர் பணி நிலையல் உள்ள கணினி பயிற்றுநர்களின் உயர்கல்வித் தகுதிக்கான ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்கிட தெரிவிக்கப்படவில்லை. எனவே அவ்வாசிரியர் பெற்ற ஊக்க ஊதிய உயர்வு திரும்ப செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதை இரத்து செய்து உரிய ஆணைகள் வழங்குமாறு கோரியுள்ளார்கள்.

மேலே கோரியுள்ள கோரிக்கையினை பரிசீலனை செய்ததில் அரசாணை நிலை எண் 240 பள்ளிக் கல்வி (விஇ) துறை நாள் 18.08.2010–ல் அறிவுறுத்தப்பட்டதின் அடிப்படையில் தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் உயர்கல்விக்கான ஊக்க ஊதிய உயர்வுகள் கணினி ஆசிரியர்கள் தகுதியுள்ள உயர்கல்வி பெற்றிருக்கும் பட்சத்தில் விதிகளின்படி அவர்களும் உயர்கல்விக்கான ஊக்க ஊதிய உயர்வுகள் பெறத் தகுதி உள்ளவர்கள் என அரசாணை நிலை 240 இணைப்பில் பத்தி 7ன்படி இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

வே.இராஜ இராஜேஸ்வரி
இணை இயக்குநர்(தொழிற்கல்வி)

பெறுநர்
தமிழ்நாடு கணினி ஆசிரியர்கள் சங்கம்
எண்.6/143, 8 வது தெரு,
அகதீஸ்வரா நகர், பொழிச்சலுார்
சென்னை.74
நகல் முதன்மைக் கல்வி அலுவலர்,
திருவண்ணாமலை மாவட்டம்.

நகல் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்